DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No. 56/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.7 | Caste | : | |
| Name | | சிங்காரவேலு | Age | | |
| Father Name | : | சிவசாமி | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 03.07.2023

**முதல் விசாரணை:—**

நான் தற்போது அம்புக்கோவில் கிராமத்தில் குடியிருக்கிறேன். 21.09.2019 அன்று சண்டை, பாண்டிச்செல்வனை ஆறுமகம், அவரது மகன் நீலகண்டமூர்த்தி, நீலகண்ட மூர்த்தி அம்மா பழனியம்மாள் ஆகிய மூவரும் கட்டையால் அடித்து பாண்டிச்செல்வத்திற்கு மண்டை உடைந்து இரத்தம் ஊற்றியது. ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு பாண்டிச்செல்வத்தை அழைத்து வந்தார்கள், பின்னிட்டு தஞ்சாவூர் வினோதகன் தனியார் மருத்துவமனைக்கு பாண்டிச்செல்வத்தை சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். பாண்டிச்செல்வத்தின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் வீட்டிலேயே அழுது கொண்டிருந்தாகள், ரெங்கசாமியும் நானும் பாண்டிச்செல்வத்தின் வீட்டிற்கு பார்க்க போனாம், அப்போது போலிசார் அந்த இடத்தை எங்கள் முன்பாக படம் வரைந்தார்கள், எங்களைப் பற்றியும் விசாரித்து எழுதி கொண்டார்கள், போலிசார் எழுதிய மகஜரில் நானும் ரெங்கசாமியும் கையெழுத்து போட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கைபொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகும்.**

**முதல் விசாரணை தொடர்ச்சிக்கு வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*

*Pudukkottai.*